தாடண்டர் நகர் அரசு அலுவலர் குடியிருப்பு சுற்றுச்சுவர்

*3271—திரு. ஆர். எஸ். ஸ்ரீதர்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தாடண்டர் நகர் (சைதை தொகுதி) அரசு அலுவலர் குடியிருப்பில் சில இடங்களில் சுற்றுச்சுவர் இடிந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் கட்டுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

(இ) எவ்வளவு மதிப்பீட்டில் எப்போது கட்டி முடிக்கப் படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்,

(ஆ) மற்றும் (இ): தாடண்டர் நகர் அரசு அலுவலர் குடியிருப்புப் பகுதியில் மின்வாரியத்திற்குச் சொந்தமான துணை மின் நிலையத்தின் சுற்றுச்சுவர்கடந்த நவம்பர் 1988-ல் பெய்த மழையின் காரணமாக இடிந்து விழுந்து விட்டது. இதனைப் புதுப்பிக்க சுமார் 2,50,000 ரூபாய் அளவில்மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது இதற்கான கட்டுமானப் பணிகள் 1990 ஜனவரிக்குள் தொடங்கப் பட்டு இருக்கவேண்டும். ஆனால் அங்கே இருக்கின்ற குடிசை வாசிகள் எழுப்பிய எதிர்ப்பின் காரணமாக சிறிது காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. குடிசைவாழ் மக்களுக்குப் பாதகம் இல்லாத வகையில் அந்தச் சுற்றுச்சுவர் எழுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்தப் பகுதியில் மிகவேகமாக சுற்றுக்சுவர் கட்டப்படுகிறது. அதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு என்னுடைய பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்தில் குடிசைவாசிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை மனதில் வைத்து உடனடியாக அருகில் இருக்கின்ற வேளச்சேரிப் பகுதியில் அவர்களுக்கு வீடு கட்டித் தருவார்களா என்பதை இந்த நேரத்தில் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரிப் பகுதியில் வீடு கட்டிக் கொடுப்பது என்பது என்னுடைய இலாக்கா சம்பந்தப்பட்டது அல்ல. அந்தக் குறிப்பிட்ட இலாக்காவிற்கு மாண்புமிகு உறுப்பினர் கேள்வி போட லாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே நன்றி தெரிவித்து விட்டதால் போதும் என்று கருதுகிறேன்.

1990 மார்ச் 19]

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர்: மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, அருகில் உள்ள ஜோதிமா நகர் பகுதியில் இருக்கின்ற அந்தச் சுற்றுச்சுவர் இடிந்து விழுகிற சூழ்நிலையில் இருக்கிறது. உடனடியாக அந்தப் பகுதியில் ஒரு சிறிய பாலத்தைக் கட்டி அண்ணா சாலைக்கு ஒரு நேரடி வழிவகையைச் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்தில்அந்தத் துறையைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

(விடை இல்லை)

சேலம் மாவட்டத்தில் குளுகோஸ் தொழிற்சாலை.

*464—திரு, ஏ. சுப்பு: மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை மூலம் ''சேகோஸ்டார்ச்'' பயன்படுத்தி குளுகோஸ் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேலம் மாவட்டத்தில் தொழிற்கூட்டுறவு துறையில் சாகோ ஸ்டார்ச்சைப் பயன்படுத்தி குளுகோஸ் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. ஏ. சுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் தர்மபுரி மாவட்டங்களில் அதிகமாக மரவள்ளிக் கிழங்கு உற்பத்தியாவதால் அதற்காக விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க கூட்டுறவுத் துறையின் மூலம் குளுகோஸ் தொழிற்சாலை ஏற்படுத்த இனியாவது அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரவள்ளிக் கிழங்கு மாவிலிருந்து குளுகோஸ் தயாரிப்பதற்கு உற்பத்திச் செலவு மற்ற மூலப் பொருட்களிலிருந்து குளுகோஸ் தயாரிப்பதை விட அதிகமாகிற காரணத்தால் அந்தத்துறையில் ஈடுபட்டவர்கள் ஏற்கெனவே நஷ்டத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் ஏற்கெனவே 3 தனியார் தொழில் நிறுவனங்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டு உற்பத்தியை அதிகரிக்க இயலாத ஒரு சூழ்நிலையில் அந்த நிறுவனங்கள் செயல்படாமல் இருக்கின்றன. எனவே மேலும் கூட்டுறவுத் துறையில் அதைப்போன்ற தொழிற்கூடத்தைக் கட்டும் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.